Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ் Mirror

MONDAY, SEPTEMBER 11, 2023

திங்கட்கிழமை, செப்டெம்பர் 11, 2023 | ஒளி: 09 கதிர்: 081 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு | FREE

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் குறித்து

# விசாரிப்பதற்கு இருவேறு குழுக்கள்

## அனைத்து தகவல்களையும் விரிவாக மீளாய்வு செய்ய ஜனாதிபதி தீர்மானம்

## சனல் 4 குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்கவும் குழு



ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் குறித்து பிரித்தானியாவின் சனல் 4 வெளியிட்ட குற்றச்சாட்டுகள் மற்றும் ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் சதித்திட்டம் இருப்பதாக முன்னாள் சட்டமா அதிபர் ஒருவர் முன்வைத்த குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்குமாக, இருவேறு குழுக்களை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சனல் 4 தொலைக்காட்சி அண்மையில் ஒளிபரப்பிய சர்ச்சைக்குரிய ஆவண நிகழ்ச்சியின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் மற்றும் பாரதூரமான குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குழுவொன்றை நியமிக்கவுள்ளார்.

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் உண்மையைக் கண்டறியவும் நீதியை நிலைநாட்டவும் சாதகமான நடவடிக்கையாக தொடர்ச்சி P2



# மூலதன சந்தை சங்கங்கள் எதிர்காலத்துக்கான முதலீடு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக் கருவின் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் 100 பாடசாலைகளில் நிறுவப்பட்டுள்ள மூலதன சந்தை சங்கங்கள் எதிர்காலத்துக்கான முதலீடாகும் என்று கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரஜீவ பண்டாரநாயக்க தெரிவித்தார்.

நிதி தொடர்பான கல்வியறிவை மேம்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமான நபர்கள், மாணவர் சந்ததியே எனவும், பாடசாலைகள் ஊடாக இத்திட்டத்தை ஆரம்பிக்க ஜனாதிபதியின் தீர்மானம் காலத்திற்குப் பொருத்தமான முடிவு எனவும் அவர் குறிப்பிட்டார். தொடர்ச்சி P2

# 186 தமிழர்கள் மாயம்; 33ஆவது நினைவேந்தல் அனுஷ்டிப்பு

■ பேரின்பராஜா சபேஷ், கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, சத்துருக்கொண்டானில் விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 186 தமிழர்களின் 33ஆவது ஆண்டு நினைவேந்தல் சனிக்கிழமை (09) மலை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

சத்துருக்கொண்டானில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிக்குக்கு முன்பு ஒன்றுகூடிய காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மலர்தூவி, விளக்கேற்றி அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து இரங்கல் கூட்டம் நடைபெற்றது.

1990ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 09ஆம் திகதி சத்துருக்கொண்டான், பனிச்சையடி, கொக்குவில், பிள்ளையாரடி பகுதிகளைச் சேர்ந்த தொடர்ச்சி P2





நீர்வழங்கல் தொடர்பில்

# ஐ.நா பிரதிநிதிகளுடன் விசேட கலந்துரையாடல்

ஐக்கிய நாடுகளின் விசேட செயற்றிட்டத்துக்கான ஸ்தாபனத்தின் தெற்காசியாவின் பணிப்பாளர் சார்லஸ் காலனன் மற்றும் விசேட செயற்றிட்ட முகாமையாளர், செயற்றிட்ட மேலாளர் ஆகியோருக்கும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் இடையிலான கலந்துரையாடல் அமைச்சில் இடம்பெற்றது. தொடர்ச்சி P2

பல்கலைக்கழகத்தில் திருட்டு:

# 2 இராணுவ சிப்பாய்கள் உட்பட மூவர் சிக்கினர்

■ கனகராசா சரவணன்



மட்டக்களப்பு பல்கலைகழகத்தில் இருந்து கணினிகள் மற்றும் மின்குமிழ்களைத் திருடிச் சென்ற 2 இராணுவ சிப்பாய்கள் உட்பட 3 பேரை வெலிகந்தை வீதி சோதனைச் சாவடியில் வைத்து ஞாயிற்றுக்கிழமை (10) அதிகாலையில் கைது செய்துள்ளதாகவும் இவர்களிடமிருந்து 5 கணினிகள் 80 மின்விளக்குகள் என்பவற்றை மீட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.. தொடர்ச்சி P2

# போலி மருந்துகளில் வந்த பணம் கெஹலியவின் பொக்கெட்டில்

## புதியவர் வேண்டும் என்கிறார் செல்வம் எம்.பி

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல போலியான மருந்துகள் இறக்குமதி செய்து, அந்தப் பணத்தை தனது பொக்கட்டுகளில் நிரப்பி உள்ளார் என்றும் மக்களுடைய வாழ்க்கையுடன் விளையாடிக் கொண்டிருக்கும் தற்போதைய சுகாதார அமைச்சர் உடனடியாக பதவி தொடர்ச்சி P2

2023 க.பொ.த உயர்தர

# பரீட்சை திகதிகளில் எந்த மாற்றமுமில்லை

2023 க.பொ.த உயர்தரப் பரீட்சை திகதிகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை என்றும் 2023 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை நவம்பர் மாதம் 27 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2022 பரீட்சை பெறுபேறுகளை வெளியிட தாமதம் ஏற்பட்டுள்ளதால் பரீட்சையை ஒத்திவைக்குமாறு பல தரப்பினரும் கோரிக்கை முன்வைத்திருந்த நிலையில், கடந்த வாரம் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியிருந்தன. தொடர்ச்சி P2



# ஜனாதிபதிக்கு பொப்பி மலர் அணிவிப்பு

பொப்பி மலர் தினத்தை முன்னிட்டு, இலங்கை ஓய்வுபெற்ற போர்வீரர்கள் சங்கத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் உபுல் பெரேராவால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து சனிக்கிழமை (09) பொப்பி மலர் அணிவிக்கப்பட்டது.

உலக யுத்தங்களின் போதும் 30 வருடகாலம் இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்திலும் உயிர் நீத்த இராணுவ வீரர்களின் நினைவாக, இலங்கை ஓய்வுபெற்ற போர் வீரர்கள் சங்கத்தால் வருடாந்தம் பொப்பி மலர் தினம் ஏற்பாடு செய்யப்படுகின்றது. தொடர்ச்சி P2

உயர்தர பெறுபேற்றில் மோசடி:

# முல்லை ஆசிரியர் உட்பட இருவருக்கு விளக்கமறியல்

■ எம். றொசாந்த்

க.பொ.த உயர்தரப் பரீட்சையின் போலியான பெறுபேற்று சான்றிதழை சமர்ப்பித்து 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் ஆசிரியர் சேவையில் கடமையாற்றிய நபரையும், அவருக்கு போலி சான்றிதழை வழங்கியவரையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் உத்தரவிட்டார். தொடர்ச்சி P2

தையிட்டி விகாரை விவகாரம்:


# மண்ணைப் பாதுகாக்க நாளை அணிதிரளுங்கள்

## மக்களுக்கு சட்டத்தரணி சுகாஷ் அழைப்பு

■ எஸ். நிதர்ஷன்

பலாலி, தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரைக் காணியை சுவீகரிக்க முயற்சி எடுக்கப்பட்டு உள்ளதாகத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் மேச்சாளர் சட்டத்தரணி கே. சுகாஷ், இதனைத் தடுத்து நிறுத்தி எமது மண்ணைப் பாதுகாக்க அனைவரும் செவ்வாய்க்கிழமை (12) அணிதிரளுமாறு அழைப்பு விடுத்துள்ளார். தொடர்ச்சி P2

# கடும் மழையால் அழிவடைந்த நெற்பயிர்களுக்கு இழப்பீடு



கடும் மழை காரணமாக அழிவடைந்த நெற்பயிர்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இது குறித்து விவசாய காப்புறுதி சபையுடன் பேசியுள்ளதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். தொடர்ச்சி P2

# தமிழர்களின் படுகொலைக்கு ஒட்டுக்குழுக்களும் உடந்தை

■ பேரின்பராஜா சபேஷ்



ஆசாத் மௌலானவின் மூலம் அண்மையில் பல உண்மைகள் வெளிவந்துள்ளன என்றும் தமிழ் மக்களைப் படுகொலை செய்வதற்கு தமிழர்களும் ஒட்டுக்குழுக்களாக இருந்திருக்கிறார்கள் என்பது மிகக் கேவலமான வெட்கப்படக் கூடியவிடயமாகும் என்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார். தொடர்ச்சி P2

அධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

PAGE 1 தொடர்ச்சிகள்

# விசாரிப்பதற்கு...

ஜனாதிபதி இந்தக் குழுவை நியமிக்க உள்ளார்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னணியில் பிரதான நாசகார சூத்திரதாரி ஒருவர் இருப்பதாக முன்னாள் சட்டமா அதிபர் இதேபோன்ற குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளார். எனவே இந்த நிலைமை 'எரியும் நெருப்பில் வைக்கோல் சேர்ப்பது' போன்ற சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

இந்தப் பிரச்சினைகளை பரந்தளவில் கவனத்துக்குக் கொண்டு வந்து, அவற்றை விரைவாகத் தீர்ப்பதற்காக, இந்தத் தூண்டுதல் ஏற்படுத்தும் கூற்றுக்களை விசாரிப்பதற்காக பாராளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்கவும் அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

தற்போதைய நிலைமையின் தீவிரத்தன்மைக்கு ஏற்ப, தற்போது முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும் விரிவாக மீளாய்வு செய்ய ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழு அறிக்கை மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை என்பவற்றுக்கு மேலதிகமாக, எதிர்காலத்தில் வெளியிடப்படவுள்ள இந்த இரண்டு அறிக்கைகளும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளன.

சரியான மற்றும் தீர்க்கமான நடவடிக்கைக்கு வழி வகுத்து, நிலைமையைப் பற்றிய தெளிவான புரிதலை சட்டம் இயற்றுபவர்களுக்கு வழங்குவதே இந்த விரிவான செயல்முறையின் நோக்கமாகும்.

உண்மையைக் கண்டறிவதற்காக இந்த முக்கியமான விசாரணைகள் நடத்தப்படும் அதேவேளை, பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்பதே ஜனாதிபதியினுடையதும் அரசாங்கத்தினுடையதும் பிரதான நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போலி மருந்துகளில் வந்த பணம் கெஹலியவின் பொக்கெட்டில்

நீக்கம் செய்யப்பட்டு, இளமையான புதிய ஒருவர் சுகாதார அமைச்சராக நியமிக்கப்படவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (10) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது நாட்டை சேர்ந்த பல ஆயிரக்கணக்கான வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறி உள்ளனர். இதனால் எமது மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். வடமாகாணத்தை பொறுத்தவரையில் தலைமை தாங்குகின்ற வைத்தியர்கள் தமது பிரச்சினைகளை வெளியே கூறி உள்ளனர்.

அவர்கள் விடா முயற்சியுடன் செயற்பட்டாலும் கூட நிலவுகின்ற வைத்திய பற்றாக்குறையை ஈடு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் தொடர்ந்தும் அரச வைத்தியசாலைகளில் வழங்கப்படுகின்ற மாத்திரைகள் போலியானதாக உள்ளதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன.

ஒட்டுமொத்த நாடுகளையும் சுகாதார அமைச்சர் ஏமாற்றியது மட்டுமின்றி, இதற்கு ஆதரவாக வாக்களித்தவர்களும் ஒட்டுமொத்த நாட்டையும் மக்களையும் ஏமாற்றி உள்ளனர். இந்தப் பிரச்சினையில் இருந்து மீண்டு எழ வேண்டுமாக இருந்தால் சுகாதார அமைச்சர் மாற்றப்பட வேண்டும்.

அவர் வெற்றி பெற்று விட்டார் என்ற எண்ணத்துடன் இருக்க முடியாது. அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்காக அவரை வெற்றி பெறச் செய்துள்ளனர். அவர் மாற்றப்பட வேண்டும்; அல்லது அவர் இராஜினாமா செய்ய வேண்டும்.

உயிர் சம்பந்தமான பிரச்சினையில், ஜனாதிபதி கவனம் செலுத்தி, இவ்வாறானவர்களை வெளியேற்றி, சுகாதாரத் துறைக்கு நல்ல இளமையானவர்களை அமைச்சராக நியமித்து ஏற்பட்டுள்ள பிரச்சினையை மீட்டெடுக்க துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்" என்றார்.

## 2 இராணுவ சிப்பாய்கள் உட்பட மூவர் சிக்கினர்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள, முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநரின் மட்டக்களப்பு பல்கலைக்கழகம், 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பின்னர் இராணுவம் பெறுப்பேற்று, பாதுகாப்பு சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

கடந்த காலத்தில் கொரோனா சிகிச்சை மத்திய நிலையமாக அதனை மாற்றி செயற்பட்டு வந்ததுடன் இது இராணுவ பாதுகாப்பில் இருந்துவருகின்றது.

இந்த நிலையில் குறித்த பல்கலைக்கழகத்தில் கடமையாற்றி வந்த இரு இராணுவத்தினர் கடமை நேரத்தில் அங்கிருந்த 5 கணினிகள் மற்றும் 80 மின்குமிழ்களை திருடி அவற்றை பொதிசெய்து வைத்துள்ளனர்.

விடுமுறையில் செல்லும் தினமான ஞாயிறு அதிகாலை, பொதியை ஏற்றிக்கெண்டு பயணிப்பதை அவதானித்த பொலிஸார் குறித்த ஓட்டோவை சோதனையிட்டபோது திருடிக் செல்வதை கண்டுபிடித்ததுடன், இரு இராணுவச் சிப்பாய்கள் ஓட்டோ சாரதி உட்பட 3 பேரை கைது செய்தனர்.

இந்தப் பல்கலைக்கழகத்தை இராணுவம் பெறுப்பேற்ற பின்னர் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான இலத்திரனியல் பொருட்கள் திருட்டுப்போயுள்ளதாக பல்கலைகழக முகாமையாளர் பொலிஸ் நிலையத்தில் 5 முறைப்பாடுகள் செய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

## ஐ.நா பிரதிநிதிகளுடன் விசேட கலந்துரையாடல்

இதன்போது, நீர்வழங்கல் துறையில் விசேட செயற்றிட்டங்களை அமல்படுத்தவும், தங்குதடையின்றி நீர்வழங்கலை வழங்கவும், நீர் சுத்திகரிப்பில் மீளாக்க வலுவுற்பத்தியை பயன்படுத்தவும் அது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

நீர்வழங்கல் துறையில் புதிய தொழில்நுட்பங்களை உள்வாங்குதல் தொடர்பாகவும், பண்ணாட்டு முதலீட்டு முறைமை மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களின் உதவியுடன் நீர் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், பெருந்தோட்ட பகுதிகளில் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட இருக்கும் விசேட வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

இதில் வீடமைப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகள் அபிவிருத்தி தொடர்பாக விசேட செயற்றிட்டங்களை மேற்கொள்ளவும், சர்வதேச நிதி நிறுவனங்களின் உதவிகளை நாடுவதற்கும் முன்மொழிவுகளை உருவாக்குவதற்கும் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன.

## மூலதன சந்தை சங்கங்கள் எதிர்காலத்துக்கான முதலீடு

அண்மையில் ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட '101 கதா' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், "வங்கித் துறை பற்றிய அறிவு பாடசாலைகளில் கொடுக்கப்பட்டாலும், மூலதனச் சந்தை பற்றிய அறிவை அளிக்கும் நிலை குறைவாகவே உள்ளது. நிதி அறிவும் குறைவாக உள்ளது.

எனவே, அதையும் தாண்டி வணிக ரீதியில் மட்டுப்படுத்தப்பட்ட அறிவை விரிவுபடுத்துவது, அதாவது கலை, அறிவியல், கணிதம் போன்ற எந்தத் துறை மாணவர்களுக்கும் மூலதனச் சந்தை பற்றிய ஓரளவு அறிவை இச்சங்கங்கள் மூலம் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக, பாடசாலைகளுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் வழங்கி அவற்றை முதலீடு செய்வதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கவும் அதன் பெறுபேறுகளுக்கு அமைய பாடசாலைகளுக்கு பரிசில் வழங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பாடசாலையின் மூலதன சந்தை சங்கத்தின் 10 அங்கத்தவர்களுக்கும் சங்கத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்கும் சிங்கப்பூர் சென்று பங்குச்சந்தை பற்றிய அனுபவம் பெறுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்குத் தேவையான முறைமைகளை தயாரித்து வருகிறோம்.

கல்வி அமைச்சு, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை மற்றும் ஜனாதிபதி அலுவலகம் ஆகியவற்றின் மேற்பார்வையின் கீழ் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிறிய அளவிலான வர்த்தக முயற்சிகளுக்கு இப்போது பங்குச் சந்தையில் சேரவும், தங்கள் வணிகத்தை மேம்படுத்த மூலதனத்தைப் பெறவும் வாய்ப்பு உள்ளது.

இந்தியா போன்ற வளர்ச்சியடைந்த நாட்டு பொருளாதாரங்களில் மூலதனச் சந்தை பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. பங்குச் சந்தையின் சந்தை மூலதனம் மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாகக் கணக்கிடப்படுகிறது.

இது இலங்கையில் சுமார் 25% ஆகவே உள்ளது. இது இந்தியா போன்ற நாட்டில் 80%-85% ஆகவும், மலேசியாவில் 100% ஆகவும் உள்ளது. அதன்படி, பங்குச் சந்தையின் பங்களிப்பு ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் மிக உயர்ந்த தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்து நடவடிக்கைகளும் உலகில் எங்கிருந்தும் கையடக்கத் தொலைபேசிகள் ஊடாக மேற்கொள்ள முடியும்.

உண்மையில், ஜனாதிபதியின் இந்தத் திட்டம் மிகவும் சரியானது. அது வெற்றியடையும் என்ற உறுதியான நம்பிக்கை எங்களுக்கு உள்ளது" என்றார்.

## முல்லை ஆசிரியர் உட்பட...

ஆசிரியர் சேவை பதவிநிலை உயர்வு பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேற்று சான்றிதழ் உறுதிப்படுத்தலுக்காக பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்ட போதே அது போலியானது எனக் கண்டறியப்பட்டு மோசடி குற்றச்சாட்டின் கீழ் சிறப்பு குற்றத் தடுப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், முல்லைத்தீவு கல்வி வலய பாடசாலை ஒன்றில் கற்பித்த ஒருவரை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபர் இராணுவ சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் கடமையாற்றி இருந்தார்.

2019ஆம் ஆண்டில் தொண்டர் ஆசிரியர்களை ஆசிரியர் சேவை தரம் 3இற்கு உள்ளீர்க்கும் போது குறித்த நபருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. 3 வருடங்களுக்கு மேலாக ஆசிரியராக சம்பளம் பெற்று வந்த நிலையில், பதவிநிலை உயர்வுக்காக கல்வித் தகைமை ஆவணங்களை அவர் சமர்ப்பித்துள்ளார்.

க.பொ.த (சா/த), (உ/த) பரீட்சை சான்றிதழ் பரீட்சைகள் திணைக்களத்துக்கு உறுதிப்படுத்தலுக்காக அனுப்பிவைக்கப்பட்டன. அவற்றில் க.பொ.த. (உ.த) பரீட்சை சான்றிதழ் சுட்டெண் தவறு என்பது கண்டறியப்பட்டு பரீட்சைகள் திணைக்களத்தால் பொலிஸ் திணைக்களத்துக்கு மோசடி குற்றச்சாட்டின் கீழ் அறிக்கையிடப்பட்டது.

பொலிஸ் திணைக்களத்தினால் குறித்த நபர் மீதான விசாரணை யாழ்ப்பாணம் பொலிஸ் சிறப்பு குற்ற விசாரணை பிரிவுக்கு மாற்றப்பட்டது. பொலிஸ் பரிசோதகர் குணரோஜன் தலைமையிலான சிறப்பு குற்ற விசாரணை பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து மோசடி நபரை, கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

அத்துடன், அவருக்கு உயர்தரப் பரீட்சையின் போலி சான்றிதழை தயாரித்து வழங்கிய நபரும் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இருவரையும் மேலதிக விசாரணைகளின் பின்னர் யாழ். நீதவான் முன்னிலையில், சனிக்கிழமை (09) ஆஜர்படுத்திபோது, அவர்களை எதிர்வரும் 22ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

## பரீட்சை திகதிகளில் எந்த மாற்றமுமில்லை

2022 உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மற்றும் 2023 உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் செப்டெம்பர் 16 ஆம் திகதி வரை ஒன்லைனில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்களை https://onlineexams.gov.lk/eic என்ற இணையதளத்தில் சமர்ப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உயர்தரப் பரீட்சை அறிவிக்கப்பட்ட அட்டவணையின் பிரகாரம் நடைபெறும் எனவும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் நோக்கம் தமக்கு இல்லை எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதிக்கு பொப்பி மலர் அணிவிப்பு

பொப்பி மலர் விற்பனையால் கிடைக்கும் வருமானத்தை கொண்டு இலங்கை ஓய்வுபெற்ற போர் வீரர்கள் சங்கத்துடன் இணைந்து செயற்படும் முப்படையிலிருந்து ஓய்வு பெற்றோர் அங்கத்துவம் வகிக்கும் 44 சங்கங்களின் 50 ஆயிரம் உறுப்பினர்களின் நலன்புரிச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## கடும் மழையால் அழிவடைந்த நெற்பயிர்களுக்கு இழப்பீடு

தங்காலை - நேடொல்பிட்டிய உள்ளிட்ட பல பிரதேசங்களுக்கு மழையால் சேதமடைந்த நெற்பயிர்களை அவதானிப்பதற்காக சனிக்கிழமை (09) விஜயமொன்றை மேற்கொண்டிருந்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, வறட்சியான வானிலையால் சிறுபோகத்தில் 63,000 ஏக்கருக்கும் அதிகமான விளைநிலங்கள் அழிவடைந்துள்ளதாக விவசாய காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

வறட்சியான வானிலையால் நெற்பயிர் விளைநிலங்களே அதிக அளவு பாதிப்பை எதிர்கொண்டுள்ளதாகவும் இந்த விடயம் தொடர்பான அறிக்கை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் விவசாய அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதாக சபை தெரிவித்துள்ளது.

பெரிய வெங்காயம், மிளகாய், சோயா உள்ளிட்ட ஏனைய போகப் பயிர்கள் பயிரிடப்பட்டிருந்த 460 ஏக்கருக்கும் அதிகமான விளைநிலங்களும் அழிவடைந்துள்ளதாகவும் 64,342 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாய காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

## மண்ணைப் பாதுகாக்க நாளை அணிதிரளுங்கள்

அவர் மேலும் தெரிவிக்கையில், "பலாலி, தையிட்டி பிரதேசத்தில் அமைந்திருக்கின்ற சட்டவிரோத விகாரைக் காணியை ஆக்கிரமிப்பதற்கு நில அளவைத் திணைக்களமும் அரச அதிகாரிகளும் வருகை தர இருப்பதாக நம்பத் தகுந்த தகவல் எங்களுக்கு கிடைத்திருக்கிறது.

இந்த அளவீட்டு பணிகள் இடம்பெறுமாக இருந்தால் நிரந்தரமாகவே அந்தக் காணிகள் சுவீகரிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டு விடும்.

ஆகவே சட்டவிரோத விகாரைக் கட்டுமானத்தை எதிர்த்தும் நில அளவைப் பணிகளை எதிர்த்தும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தமிழ் மக்கள் அனைவரும் அங்கே திரண்டு தமது எதிர்ப்பை பலமாக காட்டி, அளவீட்டு பணிகளை தடுக்க வேண்டிய காலத்தின் கட்டாயம் எழுந்திருக்கிறது.

எனவே தமிழ் மக்கள் அனைவரும் எமது கோரிக்கையை ஏற்று செவ்வாய்க்கிழமை காலையில் அந்த இடத்துக்கு அணிதிரள வேண்டும். எமது மண்ணை பாதுகாக்க அனைவரும் அணிதிரள வேண்டுமென அன்புரிமையோடு கேட்டு நிற்கிறோம்" என்றார்.

## தமிழர்களின் படுகொலைக்கு ஒட்டுக்குழுக்களும் உடந்தை

"அப்பாவி மக்களை கொலைசெய்யும் போது அதனைத் தடுக்க முடியாது மௌனிகளாக தலையாட்டுகின்றவர்களாக காட்டிக் கொடுக்கிறவர்களான இருந்துள்ளீர்கள். இது மிகவும் வெட்கவேடான விடயமாகும்" என்றும் அவர் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு, சத்துருக்கொண்டானில் விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட 186 தமிழர்களின் 33ஆவது ஆண்டு நினைவேந்தல் சனிக்கிழமை (09) மாலை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

நினைவேந்தலில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

"1956ஆம் ஆண்டு முதல் 2009 ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

அந்த வரிசையில் 1990ஆம் ஆண்டு என்பது மிக முக்கியமான காலம். மட்டக்களப்பு மாவட்டம் இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் வந்த நேரம் இராணுவம் பாதுகாக்கும் என்று நம்பி, வீடுகளுக்குள் இருந்த மக்கள் கொலை செய்யப்பட்ட நிகழ்வுதான் சத்துருக்கொண்டான் படுகொலையாகும்.

நான்கு கிராமங்களைச் சேர்ந்தவர்களை கூட்டம் ஒன்றிற்கு வருமாறு அழைத்து சென்றவர்களை, விசாரணைக்கு அழைத்துச் சென்று கொலை செய்துள்ளார்கள். அந்தச் சம்பவம் நிகழ்தேறி 33 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன. இறந்தவர்களை புதைத்த புதைகுழி கூட இன்னும் கண்டறியப்படவில்லை.

தற்போது கொக்குத் தொடுவாய்ப் புதைகுழி, சதோச புதைகுழி என 30க்கும் மேற்பட்ட புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் சத்துருக்கொண்டான் புதைகுழி இன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை. சத்துருக்கொண்டான் படுகொலையை யார் யார் தலைமைதாங்கி செய்தார்கள் என்பதை பாதிக்கப்பட்ட சகோதரர் தெளிவாகச் சொல்லியிருந்தார்" என்றார்.

## 186 தமிழர்கள் மாயம்; 33ஆவது நினைவேந்தல் அனுஷ்டிப்பு

186 தமிழர்கள் பாதுகாப்புத் படையினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டதாக கூறப்படும் சம்பவம் நடைபெற்று 33 ஆண்டுகள் கடந்த நிலையில் அவர்களது உறவினர்களினால் நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அன்றைய தினத்தில், மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட சத்துருக்கொண்டான் பாய்ஸ் டவுன் படைமுகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் சத்துருக்கொண்டான், பனிச்சையடி, கொக்குவில், பிள்ளையாரடி போன்ற கிராமங்களை சுற்றிவளைத்து அங்கிருந்த 186 அப்பாவித் தமிழ் மக்களை விசாரணைக்கென அழைத்துச் சென்றார்கள்.

இவர்களில் பெண்கள், குழந்தைகள் கற்பணி பெண்கள், சிசுக்கள் முதியவர்கள், இளைஞர்களும் அடங்கியிருந்தனர்.

இவர்கள் அனைவரும் சத்துருக்கொண்டான் பாய்ஸ் இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டதாக அப்பிரதேச மக்கள் கூறுகின்றனர். இதில் ஒருவர் மாத்திரம் பலத்த காயங்களுடன் உயிர்தப்பி ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தார்.

இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டு சிறிது நேரத்தில் அழுகுரல்கள் மற்றும் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டதாகவும் பின்பு அப்பிரதேசத்தில் புகைமண்டலம் தெரிந்ததுடன் பின்னர் பிணவாடை வீசியதாக வீடுகளின் மறைந்திருந்து உயிர்தப்பியவர்கள் தெரிவித்தனர்.

தமிழினப் படுகொலைக்கு

# சர்வதேச விசாரணை நடத்தியிருந்தால் ஈஸ்டர் படுகொலை தடுக்கப்பட்டிருக்கும்

## வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்



**நிதர்சன் வினோத்**

முள்ளிவாய்க்காலில் 2009இல் மிகக் கோரமாக நடந்த தமிழினப் படுகொலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, சர்வதேச விசாரணை மூலம் நீதி வழங்கப்படிருந்தால் 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு படுகொலை நடைபெற வாய்ப்பில்லை என வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்தார். அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:

ஈஸ்டர் படுகொலைக்கான ஆதாரம் சனல் 4 தொலைக்காட்சியில் வெளியாகிய பின்னர், பாராளுமன்றத்தில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் எனப் பலகுரல்கள் மேலேழுந்தன. கர்தினால் மல்க்கம் ரஞ்சித் ஆண்டகை உட்பட தற்போது கதறும் தரப்புகள் ‘கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்’ செய்கின்றனர்.

அன்று, முள்ளிவாய்க்கால் படுகொலையை அரங்கேற்றிய அதே தரப்பினர் தான், ஈஸ்டர் படுகொலையை அரங்கேற்றினார்கள் என்பது தற்போது நிரூபணமாகிவிட்டது. ஆகவே, அன்று முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு சர்வதேச விசாரணை மேற்கொண்டு நீதி வழங்கியிருந்தால் உயிர்த்த ஞாயிறு படுகொலை நடந்திருக்க மாட்டாது.

எதிர்காலத்திலும் வேறு வடிவங்களில் ஆட்சிக் கதிரையைப் பிடிக்க, இப்படியான நிகழ்வுகள் அரங்கேற்றப்படலாம். இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமாக இருந்தால், முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கும் உயிர்த்த ஞாயிறு படுகொலைக்கும் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்; பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்றார்.




குதூகலிப்புடன் கூடிய அறிவூட்டுதல்

# சிறுவர்களுக்கான விழிப்புணர்வு

**பா. ஜதுர்சனா**

கிளிநொச்சி, அக்கராயன் பிரதேசத்தில் வேள்ட் விசன் நிறுவனத்தால் ‘சிறுவர்களுக்கான குதூகலிப்புடன் கூடிய அறிவூட்டுதல்’ எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு செயலமர்வு நேற்று முன்தினம் (09) முன்னெடுக்கப்பட்டது.

இதில், குறித்த பிரதேசத்தை சேர்ந்த 190 வரையான சிறுவர்கள் கலந்து கொண்டிருந்ததுடன் ‘உறவுகளும் விடலைப் பருவமும்’, ‘ உணர்வு சார் நுண்ணறிவு’, ‘ஒழுக்கமும் பொறுப்புகளும்’, ‘சகபாடிகளின் அழுத்தம்’ ஆகிய தலைப்புகளின் கீழ் கருத்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

சிறுவர்கள் தமது பொழுதுகளை அர்த்தமுள்ளதாகவும் மகிழ்ச்சியாகவும் கழித்து, உடல்உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையிலும் குறித்த செயலமர்வு முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் வேள்ட் விசன் நிறுவனத்தின் பணியாளர்கள், கிராம அலுவலர் மற்றும் பதவி நிலை அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

புதன்கிழமை

# உக்குவளையில் சாகித்திய கலை நிகழ்ச்சி

**ஏ.எம் ஜலீல்**

தேசிய கலாசாரத்தை முன்னிட்டு கலாசார தினைக்களமும் உக்குவளை பிரதேச செயலகமும் இணைந்து சாகித்திய கலை நிகழ்ச்சியை உக்குவளை பிரதேச சபை மண்டபத்தில் புதன்கிழமை (13) காலை 9.00 மணிக்கு நடத்தவுள்ளது.

உக்குவளை பிரதேச செயலாளர் சேரசிங்க, உக்குவளை கலாசார பிரிவைச் சேர்ந்த திருமதி தம்மிக்க உட்பட இப்பிரிவின் அதிகாரிகள், பிரமுகர்கள் கலந்து சிறப்பிக்கும் இந்நிகழ்வில், மும்மத கலாசார நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன் கலைத்துறையில் சிறப்பிடங்களைப் பெற்ற ஆர்வமிக்க பாடசாலைகளின் மாணவர், மாணவியர்களுக்கு இந்நிகழ்வின்போது பிரமுகர்களால் பரிசில்களும் வழங்கிவைக்கப்படவுள்ளன. இந்நிகழ்வில், கலைஞர்களும் கலந்துசிறப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# விகாரை பெயர் பலகையால் திருமலையில் பதற்றம்



**அ. அச்சுதன்**

திருகோணமலை, இலுப்பைக்குளம் பகுதியில் பொரலுகந்த ரஜமகா விகாரைக்கான பெயர்பலகை நாட்டப்பட்டுள்ளதால் அப்பகுதியில் நேற்று (10) பதற்ற நிலைமை காணப்பட்டது.

திருகோணமலை - நிலாவெளி பிரதான வீதியின் பெரியகுளம் சந்திக்கு அருகில் உள்ள இலுப்பைக்குளம் பகுதியில், பொரலுகந்த ரஜமகா விகாரை எனும் பெயர் பொறிக்கப்பட்ட பெயர் பலகை, நேற்று (10) காலை பௌத்த பிக்குகள் சிலரால் நாட்டப்பட்டது.

சிங்கள மக்களின் குடியிருப்பு இல்லாத பகுதியில், குறித்த விகாரை அமைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இச்செயற்பாடானது இனங்களுக்கிடையே முறுகல் நிலையை ஏற்படுத்தும் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.




# பிள்ளையானின் த.ம.வி.பு கட்சியின் கண்டன பேரணி

**ரீ.எல் ஜவ்பர்கான்**

‘ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை திசைதிருப்பாதே; உண்மையை உலகறியச் செய்’ எனும் தொனிப்பொருளில், ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை பகிரங்கப்படுத்த கோரி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆதரவாளர்கள், தொண்டர்கள், உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் போன்றோரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கண்டன ஆர்ப்பாட்ட பேரணி நேற்று (10) காலை நடைபெற்றது. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மட்டக்களப்பு லேக் வீதி தலைமை காரியாலயத்தில் இருந்து ஆரம்பமாகிய பேரணி மகாத்மா காந்தி பூங்கா வரை சென்றது.

கல்குடா தொகுதி முஸ்லிம் பிரதேசத்தின்

# முதலாவது பேராசிரியருக்கு கௌரவிப்பு



**எம்.எம் அஹமட் அனாம்**

கல்குடா தொகுதி முஸ்லிம் பிரதேசத்தின் முதலாவது பேராசிரியரான எம்.சீ.ஏ நாஸரை கௌவிக்கும் நிகழ்வு, வாழைச்சேனை முகைதீன் ஜும்ஆ பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபையின் ஏற்பாட்டில் முகைதீன் ஜும்ஆ பள்ளிவாயலில் நடைபெற்றது.

குறித்த நம்பிக்கையாளர் சபையின் தலைவர் அல் ஹாஜ் மௌலவி எம்.ஐ.எஸ் முஹம்மட் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பள்ளிவாயல் நிர்வாக சபையினர், ஊர் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பேராசியராகப் பதவியுயர்வு பெற்று, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் கணக்கியல்துறை பேராசிரியராக நியமனம் பெற்றுள்ள கலாநிதி எம்.சீ.ஏ நாஸர், மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் தான் பிறந்த பிரதேசத்துக்கும் தனது சமுகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார் என்று பள்ளிவாயல் நிர்வாகம் தெரிவித்தது.

பல்கலைக்கழக அனுமதி:

# இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

**க. அகரன்**

பல்கலைக்கழக அனுமதி தொடர்பான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு, பம்பைமடுவில் அமைந்துள்ள வவுனியா பல்கலைக்கழகத்தில் எஸ்ஏச் 4 மண்டப, சூசைரட்ணம் கட்டடத் தொகுதியில் புதன்கிழமை (13) பிற்பகல் 12.30 தொடக்கம் மாலை 05.30 வரை நடைபெறவுள்ளது.

2022ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரம் பரீட்சைக்கு தோற்றி, பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க எதிர்பார்த்திருக்கும் அனைத்து பாட மாணவர்களுக்கும், பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்தல், இணைய வழிப்பதிவு, பல்கலைக்கழக பாடத் தெரிவு தொடர்பான விழிப்புணர்வு போன்றவை குறித்து வழிகாட்டும் நோக்கில் குறித்த கருத்தரங்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கு வவுனியா பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் அலகின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின்

# 157 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சிரமதான பணி

**பாறுக் ஷிஹான்**

இலங்கை பொலிஸ் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு 157ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கல்முனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்முனை முகையதீன் ஜும்மா பள்ளிவாசல் வளாக பகுதியை சுத்தப்படுத்தும் முகமாக சிரமதான நிகழ்வு நேற்று (10) இடம்பெற்றது.

இந்நிகழ்வை கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல் புத்திக வழிகாட்டலினூடாக, கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இச்சிரமதான நடவடிக்கையின் போது, கல்முனை மாநகர சபையும் பொலிஸாருடன் இணைந்து கொண்டதுடன் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கத்துடனும் டெங்கு நோயின் தாக்கத்தை இப்பிரதேசத்தில் கட்டுப்படுத்தும் முகமாகவும் தேங்கிக் காணப்பட்ட கழிவுகள், குப்பைகூழங்கள் காடுமண்டிய இடங்கள் யாவும் அகற்றி சுத்தப்படுத்தி பள்ளிவாசல் வளாக சூழலை அழகுபடுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இச்சிரமதானத்தில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பல்வேறு குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ் பரிசோதகருமான எம். எல் றபீக், கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ வாஹிட், கல்முனை முகையதீன் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் வைத்தியர் எஸ்.எம்.ஏ அஸீஸ், பொலிஸ் ஆலோசனை குழுவின் பொதுச்செயலாளரும் காணி மத்தியஸ்த சபை பிரதான மத்தியஸ்தருமான எம்.ஐ.எம் ஜிப்ரி மற்றும் ஆலோசனை குழுவின் உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.



# யுவதி மீது வாள் வெட்டுத் தாக்குதல்



**நிதர்சன் வினோத்**

யாழ்ப்பாணம், நீர்வேலியில் சனிக்கிழமை (09) யுவதி ஒருவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஊடக நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்துவரும் குறித்த யுவதியின் வீட்டுக்குச் சென்ற அடையாளம் தெரியாதோர் யுவதியின் மீதும் அவரது தாய் மீதும் வாள்வெட்டு தாக்குதலை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தாக்குதல் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நுவரெலியாவில்

# வத்தளை நபர் வெட்டிப் படுகொலை

**எஸ். கணேசன்**



நுவரெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நுவரெலியா - மீப்பிலிமான பகுதியில் வத்தளை பகுதியைச் சேர்ந்த 53 வயதான எஸ். சுந்தரலிங்கம் என்பவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். சம்பவத்தில், வெள்ளவத்தை பகுதியை சேர்ந்த பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காணி தகராறு காரணமாகவே, இக் கொலை இடம்பெற்றுள்ளது எனத் தெரிவித்த பொலிஸார், சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளதாகவும் அவரைக் கைது செய்வதற்கான விசாரணை ஆரம்பமாகி உள்ளதாகவும் தெரிவித்தனர்.

‘நடந்தாய் வாழி வழுக்கை ஆறு’

# குளங்கள் காணும் பயணம்

**பு. கஜிந்தன்**

‘நடந்தாய் வாழி வழுக்கை ஆறு’ எனும் தொனிப்பொருளில் வழுக்கியாற்றின் வழிதோறும் உள்ள குளங்கள் காணும் பயணம் நேற்று முன்தினம் (09) இடம்பெற்றது.

தெல்லிப்பழையில் இருந்து ஆரம்பமான இந்தப் பயணம் அராலியை சென்றடைந்தது. இந்தப் பயணத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் சுரேந்திரகுமார், சுவீடன் விவசாய பல்கலைக்கழக தகைநிலை பேராசிரியர் சிறிஸ்கந்தராசா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# எல்லாப் பாதிப்பும் சாதாரண பொதுமக்களுக்கே!

அதிகளவில் பேசப்படும் விடயங்களில் ஒன்றாக வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறும் விடயம் அமைந்துள்ளது. குறிப்பாக மருந்துப்பொருட்கள் இன்மை, இறக்குமதி செய்யப்படும் மருந்துப் பொருட்களின் தரம் தொடர்பான பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து, கடந்த வார இறுதியில் சுகாதாரத்துறை அமைச்சருக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பேரணை கொண்டு வரப்பட்டிருந்த நிலையில், சுகாதாரத்துறையில் பணியாற்றும் வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றமையும் பெரும் பிரச்சினையாக மாறி வருகின்றது.

2022 ஆம் ஆண்டில் 700 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியதுடன், இந்த எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டிலும் தொடர்ந்த வண்ணமுள்ளது. சிலர் முறையான விதத்தில் உத்தியோகபூர்வமாக தமது பணியை இராஜினாமா செய்து வெளியேறியுள்ளதுடன், சிலர் சுகாதார அமைச்சுக்கு எவ்வித முன்னறிவித்தலுமின்றி பணியிலிருந்து வெளியேறியுள்ளனர்.

அரச பல்கலைக்கழகமொன்றில் மருத்துவத்துறையில் பயிலும் மாணவர் ஒருவர், தமது கற்கையை பூர்த்தி செய்யும் காலப்பகுதிக்காக அரசாங்கத்தால் 4 மில்லியன் ரூபாய் செலவிடப்படுவதாகவும், இந்த எண்ணிக்கை சராசரியாக மாதமொன்றுக்கு ரூ. 68,215 எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அண்மையில் தெரிவித்திருந்தார். இந்தப் பெறுமதி, பொறியியல், நிர்வாகம், கலை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு செலவிடும் தொகையை விட இரண்டு மடங்கு உயர்வாக அமைந்துள்ளது.

இந்த வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறும் காரணிகளில் நாட்டின் பொருளாதார சூழல், உயர்ந்த வரி விதிப்பனவு, போதியளவு வாழ்க்கைத்தர வசதிகள் இன்மை போன்றன அடங்கியுள்ளன. அவ்வாறு நாட்டை விட்டு வெளியேறுவது என்பது அந்நபர்களின் தனிப்பட்ட தீர்மானமாக அமைந்திருந்தாலும், நாட்டு மக்கள் பெருமளவில் பொதுச் சுகாதார வசதிகளில் தங்கியுள்ளனர். தற்போதைய பொருளாதார நெருக்கடியான சூழலில் அனைவராலும் தனியார் வைத்திய வசதிகளை பெற்றுக் கொள்ள முடிவதில்லை.

குறுகிய காலப்பகுதியில் பெருமளவு வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறுகின்றமையானது, எஞ்சியிருக்கும் வைத்தியர்களுக்கு அளவுக்கதிகமான பணிச்சுமையை ஏற்படுத்துகின்றன. இதனால் மேற்கொள்ளப்படும் சிகிச்சைகளிலும் தவறுகள் நிகழ்வதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றன. அவ்வாறான சம்பவங்கள் பலதைப் பற்றி அண்மைக் காலங்களில் அதிகளவில் சமூக வலைத்தளங்களினூடாக அறிந்து கொள்ள முடிகின்றது.

இவ்வாறு வைத்தியர்கள் வெளியேறுகின்றமை நாட்டின் அரசியல் பிரமுகர்களுக்கு பெரும் பிரச்சினையாக அமையாது. குறிப்பாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களில் சுமார் 65 சதவீதமானவர்கள் 60 வயதைக் கடந்தவர்கள். அவர்களுக்கு சுகவீனம் ஏற்பட்டால் சிகிச்சைகளுக்காக வெளிநாடு பயணமாவது வழமை. எனவே உள்நாட்டு வைத்தியசாலைகளில் தரம் குறைந்த மருந்துப் பொருட்கள் இருப்பது, போதியளவு வைத்தியர்கள் இன்மை, மருத்துவ சாதனங்கள் செயலிழந்து காணப்படுகின்றமை போன்றன அவர்களுக்கு நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தாது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்களிடம் ஆக்கபூர்வமான தீர்வு இருப்பதாகவும் தெரியவில்லை. வெளிநாடுகளிலிருந்து வைத்தியர்களை அழைத்து வருவது என்பது இந்தப் பிரச்சினைக்கு தீர்வாக அமைந்துவிடாது. இதனால் எல்லாப் பாதிப்பும் சாதாரண பொது மக்களுக்கே!

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

கோழைகளுக்கு ஏது வாழ்வு? வீரர்கள் மரிப்பதில்லை. தினம் தினம் வீழ்ந்தும் உக்கிரமாக எழுந்திடுவார்கள். பயந்து வாழ்பவனுக்கு ரோசம் கிடையாது. நியாயங்களைத் தட்டிக் கேட்கத் துணிச்சல் வேண்டும்.

துணிந்தவனுக்குத் தொய்வும் இல்லை; தோல்வியும் கிடையாது. எனது நாடு; எனது இனம் என்பதற்காகப் போராடுபவருக்குப் பின்னால் செல்பவர்களைவிட, டாம்பீகமாகவும் தவறான முறையிலும் செல்வம் தேடுபவர்களுக்குப் பின்னால் திரிகின்றவர்கள்தான் அதிகம்.

நியாயத்தைப் பேசுபவர்களை வாழத்தெரியாதவர்கள் என்கின்றனர். அடிமை வாழ்வே சகஜமாகி விட்டது. மனிதன், செயலாற்றுவதற்கே பிறந்தவன்; செத்துப்போவதற்கல்ல! மக்களை மறந்தவன், வாழும் உரிமையை இழக்கிறான்.

விலங்குகள், பறவைகள் கூட, மனிதர்களை விட சுதந்திரமாக வாழுகின்றன. ஆனால், நாம் அக்கம்பக்கம் பார்த்துப் பேச வேண்டியுள்ளது. எவராவது ‘பத்தவைத்து’ விடுவாரோ என அஞ்சவேண்டியுள்ளது.

உண்மைகளைத் துணிச்சலுடன் பேசுக! பொய்யர்கள்தான் மறைந்து நின்று பயத்துடன் பேசுகின்றார்கள். சுதந்திரம் நமக்கு எப்போது?

பருத்தியூர் பால. வயிரவநாதன்

### பாராளுமன்ற வரப்பிரசாதத்துக்குள் ஒளிந்துகொண்டு

# நீதித்துறையைத் தாக்குதல்



என்.கே அஷோக்பரன்

இலங்கையில், பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பாராளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி, நீதிபதிகளையும் நீதித்துறையையும் விமர்சிப்பதும், தாக்கிப் பேசுவதும் அதிகரித்து வருவதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இந்த நடத்தை, பாராளுமன்றத்துக்கு வெளியே நடத்தப்பட்டால், நீதிமன்ற அவமதிப்புக்கு வழிவகுக்கும். நீதிமன்ற அவமதிப்பு என்பது, தண்டனைக்குரிய குற்றமாகும். நீதிமன்ற அவமதிப்புக்காக பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பி திஸாநாயக்க, ரஞ்சன் ராமநாயக்க ஆகியோர் சிறைத் தண்டனைக்கு உள்ளானமை குறிப்பிடத்தக்கது. அவர்கள் பொதுவெளியில் சொன்ன அதே கருத்து, பாராளுமன்றத்தில் சொல்லப்பட்டிருந்தால், பாராளுமன்ற வரப்பிரசாதத்தைப் பயன்படுத்தி அவர்கள் தப்பியிருக்கக்கூடும்.

பல ஜனநாயக நாடுகளைப் போலவே, இலங்கையிலும் பாராளுமன்ற சிறப்புரிமை என்பது ஆட்சிக் கட்டமைப்பில் முக்கியத்துவம் மிக்க இடத்தைப் பெற்றுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்கள், தங்கள் கருத்துகளை சுதந்திரமாக வெளிப்படுத்துவதை உறுதி செய்வதற்கும், பாராளுமன்றத்தின் புனிதமான அரங்குகளுக்குள் வெளியிடப்படும் அறிக்கைகளுக்கு எதிரான சட்டரீதியான விளைவுகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கும் இந்த வரப்பிரசாதம் வழங்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் இந்த வரப்பிரசாதமானது அரசியலமைப்பின் 4ஆம் சரத்து மற்றும் பாராளுமன்றம் (அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள்) சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன.

பாராளுமன்றம் (அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள்) சட்டத்தின் மூன்றாவது சரத்தானது, பாராளுமன்றத்தில் பேச்சு, விவாதம், நடவடிக்கைகளுக்கான சுதந்திரம் இருக்க வேண்டும் என்றும், அத்தகைய பேச்சு, விவாதம், நடவடிக்கைகளுக்கான சுதந்திரம் தொடர்பில் பாராளுமன்றத்துக்கு வெளியே எந்த நீதிமன்றத்திலோ அல்லது இடத்திலோ குற்றஞ்சாட்டப்படவோ அல்லது விசாரிக்கப்படவோ முடியாது என்றும் வழங்குகிறது.

குறித்த சட்டத்தின் நான்காவது சரத்தானது, எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும், அவர் பாராளுமன்றத்தில் கூறிய அல்லது மனு, சட்டமூலம், தீர்மானம் மூலம் பாராளுமன்றத்தில் முன்வைத்த எந்தவொரு விடயம் அல்லது விடயத்தின் காரணமாகவும், எந்தவொரு குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளுக்கும், கைது, சிறைத்தண்டனை அல்லது நட்டஈடுகளுக்கு பொறுப்பாகமாட்டார் என்று வழங்குகிறது.

குறித்த பாராளுமன்ற சிறப்புரிமையானது, ஜனநாயக மரபுகளில் தனது ஆழமான வரலாற்று வேர்களைக் கொண்டுள்ளது. முடியின் தலையீட்டிலிருந்து பிரித்தானிய பாராளுமன்றம் சுதந்திரம் பெறுவதற்கான போராட்டத்திலிருந்து, இந்தப் பாராளுமன்ற வரப்பிரசாதத்தின் வரலாற்று வேர்கள் தொடங்குகின்றன.
இங்கிலாந்தில் 1689ஆம் ஆண்டின் உரிமைகள் சாசனம் பாராளுமன்ற சிறப்புரிமையின் சில அடிப்படைக் கொள்கைகளை அறிமுகப்படுத்தியது. இவை பிரித்தானிய பாராளுமன்ற மரபுகளோடு வளர்ச்சியடைந்தன. இந்தக் கொள்கைகள் உலகெங்கிலும் உள்ள ஜனநாயக அமைப்புகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. முன்னர் குறிப்பிட்டது போல, பாராளுமன்ற வரப்பிரசாதத்திற்கான முதன்மைக் காரணங்களில் ஒன்று, பாராளுமன்ற அவைக்குள் பேச்சு மற்றும் விவாத சுதந்திரத்தைப் பாதுகாப்பதாகும். சட்டரீதியான பாதிப்புகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் அஞ்சாமல், பாராளுமன்ற உறுப்பினர்கள் முக்கியமான பிரச்சினைகளை வெளிப்படையாக விவாதிக்கவும், தங்கள் தொகுதிகளின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவும், அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு, குறிப்பாக தவறுகளுக்கு பொறுப்பேற்கவும், வெளிப்படையான மற்றும் நேர்மையான விவாதங்களை, வெளிப்படைத்தன்மையுடன் நடத்தவதற்கும் இந்த வரப்பிரசாதம் அவசியமாகிறது. இது வலுவான ஜனநாயகத்தின் அடிப்படையாகிறது.

மேலும், பாராளுமன்ற சிறப்புரிமையானது, சட்டமியற்றும் துறையானது அரசாங்கத்தின் நிறைவேற்று மற்றும் நீதித்துறைத்துறைகளில் இருந்து சுதந்திரமாக இருப்பதை உறுதி செய்வதன் மூலம் அதிகாரப் பிரிவுக் கோட்பாட்டை வலுப்படுத்துவதற்கும் முக்கிய பங்களிக்கிறது.

சில சட்ட நடவடிக்கைகளில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்களை பாதுகாப்பதன் மூலமும், அவர்கள் சுதந்திரமாக பேச அனுமதிப்பதன் மூலமும், பாராளுமன்ற சிறப்புரிமை பொது நலனை பாதுகாக்க உதவுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஊழல், தவறான நடத்தை மற்றும் அரசாங்க துஷ்பிரயோகங்களைப் பற்றியெல்லாம் தனிப்பட்ட விளைவுகளுக்கு அஞ்சாமல் அம்பலப்படுத்த இந்த வரப்பிரசாதம் அவசியமாகிறது. பொறுப்புக்கூறலை நிலைநிறுத்துவதற்கும் ஜனநாயக செயற்பாட்டில் பொதுமக்களின் நம்பிக்கையைப் பேணுவதற்கும் இது அத்தியாவசியமானது.

உலகெங்கிலும் உள்ள பல ஜனநாயக நாடுகளும் பாராளுமன்ற சிறப்புரிமையின் முக்கியத்துவத்தை அங்கிகரித்து, அதை தங்கள் அரசியலமைப்பு அல்லது சட்ட அமைப்புகளில் சேர்த்துள்ளமையானது பாராளுமன்றத்தின் சுதந்திரத்தைப் பாதுகாப்பது மற்றும் ஜனநாயக செயல்முறையைப் பாதுகாப்பதன் பெறுமதி தொடர்பில் உலகளாவிய ரீதியில் ஒருமித்த கருத்து இருப்பதை நாம் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

ஆனால், நல்ல நோக்கங்களுக்காக வழங்கப்பட்டுள்ள இந்த வரப்பிரசாதமானது, தவறான மற்றும் முறையற்ற விடயங்களுக்குப் பயன்படுத்தப்படும் போது, அது இந்த வரப்பிரசாதத்தின் இருப்பையே கேள்விக்குட்படுத்தவதாகவும், இந்த வரப்பிரசாதத்தின் பெறுமதியைக் குறைப்பதாகவும் அமைகிறது.

இலங்கையில் மேன்முறையீட்டு நீதிமன்ற, மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளை பதவி நீக்கும் அல்லது பழிமாட்டறையும் செயற்பாட்டில் பாராளுமன்றத்தின் பங்கு முக்கியமானது. அத்தகையதொரு பிரேரணை, அல்லது நீதிபதியொருவருடைய நடத்தை பற்றிய பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு, அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, அது விவாதிக்கப்படும் போது, அந்த நீதிபதி பற்றி விவாதிப்பது ஏற்புடையதாகும். ஆனால், சம்பந்தமேயில்லாமல், பாராளுமன்றத்தில் ஒரு நீதிபதி பற்றியோ, நீதிபதிகள் பற்றியோ அவதூறுக்கருத்துரைப்பது என்பது பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளுக்கு, குறிப்பாக நிலையில் கட்டளை 83-ற்கு விரோதமானதாகும்.

பாராளுமன்றம் தன்னுடைய நடவடிக்கைகளை தானே ஒழுங்கமைக்கிறது. அதற்காக நிலையியற் கட்டளைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. பாராளுமன்ற நடவடிக்கைகளின் ஒழுங்கைப் பேணும் பொறுப்பும் அதிகாரமும் சபாநாயகரின் பாற்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தையை கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்துவதில் சபாநாயகரின் பங்கு மிக முக்கியமானது. சபாநாயகரானவர் பாராளுமன்ற ஒழுங்குமுறையின் பாதுகாவலராவார். விவாதங்கள் நாகரிகம் மற்றும் மரியாதைக்குரியதாக இருப்பதை உறுதிசெய்யும் வகையில் ஒரு பாரபட்சமற்ற நடுவராக அவர் செயற்பட வேண்டும். பாராளுமன்ற சிறப்புரிமையை தவறாக பயன்படுத்தினால், குறிப்பாக நீதித்துறை மீது தாக்குதல்கள் நடத்தப்படும்போது சபாநாயகர் விழிப்புடன் இருக்க வேண்டும். எச்சரிக்கைகள், வெளியேற்றங்கள் அல்லது பிற பொருத்தமான நடவடிக்கைகள் மூலம், சபாநாயகர் அத்தகைய நடத்தைகள் பாராளுமன்றத்தால் பொறுத்துக்கொள்ளப்பட மாட்டாது என்ற தெளிவான செய்தியை வழங்கும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அது அவரது கடமை.

தனது நடவடிக்கைகளை, தானே ஆளும் பாராளுமன்றத்தின் அதிகாரம் என்பது முக்கியமானது. ஏனெனில் எந்தவொரு ஜனநாயகத்திலும் பாராளுமன்றம் என்பது ஒரு முக்கிய நிறுவனமாகும். அது புற ஆதிக்கங்கள் இல்லாது சுயாதீனமாக இயங்கவேண்டும். ஆனால் அதற்கு அர்த்தம் காட்டாற்று வெள்ளம் போல கட்டுப்பாடு இன்றி இயங்குவது அல்ல. இந்த இடத்தில்தான் பாராளுமன்ற உறுப்பினர்களின் சுய கட்டுப்பாடு என்பது அவசியமாகிறது. இந்தச் சுய கட்டுப்பாடு என்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைப் பேசுவதற்கான உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், நீதித்துறையின் புனிதத்தை நிலைநிறுத்துவதற்கும் இடையில் சமநிலையை ஏற்படுத்துவதாக அமைய வேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் சிறப்புரிமைகளை பொறுப்புடன் பயன்படுத்துவதை உறுதிசெய்வது மற்றும் நீதித்துறை செயல்முறையைத் தடுக்க அல்லது இழிவுபடுத்துவதற்கு அவற்றைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதும் பாராளுமன்றத்தின் கடமையாகும்.

ஆகவே, பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்குள் பின்பற்றுவதற்கு தெளிவான வழிகாட்டுதல்கள் மற்றும் நடத்தை விதிமுறைகள் தேவை. இந்த வழிகாட்டுதல்கள் பாராளுமன்ற சிறப்புரிமையின் பொறுப்பான பயன்பாடு மற்றும் அதன் துஷ்பிரயோகத்தின் விளைவுகளை வலியுறுத்த வேண்டும். பாராளுமன்றம் மற்றும் நீதித்துறை இரண்டின் தனித்துவத்தையும், மதிப்பையும் பேணுவதன் முக்கியத்துவத்தைப் பற்றி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கற்பிக்க பயிற்சித் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு பிரசாரங்களும் அவசியம்.

பாராளுமன்ற சிறப்புரிமை என்பது ஜனநாயக ஆட்சியின் அடிப்படை அம்சமாக இருந்தாலும், நீதித்துறையை அவமதிக்கும் வகையில் தாக்குதல்களில் ஈடுபடும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அது கேடயமாக இருக்கக்கூடாது. பேச்சு சுதந்திரம் மற்றும் நீதித்துறையின் புனிதத்தன்மை ஆகியவற்றுக்கு இடையே நுட்பமான சமநிலை பேணப்பட வேண்டும். எனவே, இத்தகைய துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கு பலமான பொறிமுறைகள் பாராளுமன்றத்திற்குள் பாராளுமன்றத்தால் வலுவாக அமல்படுத்தப்படுவது மிகவும் முக்கியமானது. இது விரைவில் நடக்க வேண்டும்.

## கடிதங்கள்

### வைத்தியர் இன்றி தவிக்கும் கால்நடை வளர்ப்பாளர்கள்

பொகவந்தலாவ, கெர்க்கஸ்வோல்ட் மேல்பிரிவு தோட்டப்பகுதியில் கடந்த மாதத்தில் மாத்திரம் கன்றுகளை ஈன்ற ஐந்து பசுமாடுகள் உயிரிழந்துள்ளதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கன்றுகளை ஈன்ற இரண்டு அல்லது மூன்று மணித்தியாலங்களுக்கு பின்னர் அவை உயிரிழந்துவிடுகின்றன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ பிரதேசத்தில் உள்ள மிருக வைத்தியசாலையில் சுமார் ஆறு மாதங்களுக்கு மேலாக வைத்தியர் ஒருவர் இல்லையென தெரிவிக்கும் கால்நடை வளர்ப்பாளர்கள், கால்நடைகளுக்கு சுகவீனம் ஏற்பட்ட பிறகு ஹட்டன் பகுதியில் உள்ள மிருக வைத்தியசாலையின் வைத்தியருக்கு அறிவிக்க வேண்டியுள்ளது.

அவ்வாறு அறிவித்தாலும் பொகவந்தலாவ பகுதிக்கு வருவதற்கு அவருக்கு நான்கு மணித்தியாலங்கள் எடுப்பதாகவும் அங்கிருந்து வைத்தியர் வரும் முன்னர் கால்நடைகள் இறந்து விடுவதாக கால்நடை வளர்ப்பாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கையை மேற்கொண்டு பொகவந்தலாவ மிருக வைத்தியசாலைக்கு வைத்தியர் ஒருவரை நியமிக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர்.

எஸ். சதீஸ்







## தேசிய சுகாதார கண்காட்சி



யாழ். வீரசிங்கம் மண்டபத்தில், தேசிய சுகாதார கண்காட்சி வெள்ளிக்கிழமை (08) ஆரம்பித்து, தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெற்றது. இதன் ஆரம்பநிகழ்வில், பிரதம விருந்தினராக தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி கலந்துகொண்டார்.

நிகழ்வில், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் த. சத்தியமூர்த்தி, யாழ். பிராந்திய சுகாதார வேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன், யாழிலுள்ள இந்திய துணைத் தூதரக துணைத் தூதுவர் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிதர்சன் வினோத்





## பிறந்த தினத்தை முன்னிட்டு மத வழிபாடு

சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திஸாநாயக்கவின் பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (09) இரத்தினபுரியில் அமைந்துள்ள ஆளுநரின் அலுவலகத்தில் மத வழிபாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில், முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். இதன்போது ஆளுநரின் ஊடக செயலாளர் அசித், ஆளுநரின் உருவப் படத்தை ஆளுநருக்கு பரிசாக வழங்கினார்.

சிவாணி ஸ்ரீ





## வீடு கையளிப்பு

அக்கரப்பத்தனை சமூர்த்தி வங்கியின் கீழ் 475ஜே கிராம சேவகர் பிரிவில், டொரிங்டன் தோட்டத்தில் விசேட தேவைக்கு உட்பட்ட நபருக்கு 'திரியபிரிச' வீடமைப்பு திட்டத்தின் மூலம், புதிய வீடு நிர்மாணிக்கப்பட்டு நேற்று முன்தினம் (09) உத்தியோகபூர்வமாக பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், லிந்துல சமூர்த்தி காரியாலயத்தில் முகாமையாளர் திருமதி தாரனி மகேந்திரன், உதவி முகாமையாளர் ஜெ, ரவி ஜெயகாந்தன், கிராமசேவகர் ஆர். குழந்தைவேல், சமூர்த்தி உத்தியோகஸ்தர் பீ. அமல்ராஜ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

துவாரக்ஷான்





## சர்வதேச லயன்ஸ் கழகம் உதவி

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் தற்போது இயங்கிவரும் கண் சிகிச்சை பிரிவை, சர்வதேச லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் மேலும் விஸ்தரிப்பது சம்பந்தமான கலந்துரையாடல், நோயாளிகளுக்குத் தேவையான அன்பளிப்புகளை வழங்குதல், மர நடுகை போன்ற நிகழ்வுகள் நேற்று முன்தினம் (09) நடைபெற்றன.

இந்நிகழ்வுகளில் பிரதம அதிதியாக, லயன்ஸ் கழகத்தின் சர்வதேச பணிப்பாளர் மகேஷ் பாஸ்கால், மாவட்ட ஆளுநர் இஸ்மத் ஹமிட், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை பணிப்பாளர் டொக்டர் அஸாத் எம் ஹனிபா, சம்மாந்துறை லயன்ஸ் கழக தலைவர் றாபி, பிராந்திய லயன்ஸ் தலைவர் எம். டி.எம் அனாப், திட்டமிடல் மருத்துவர் நியாஸ் அஹமட், ஆளுநர் செயலாளர் சிறிபால, பொருளாளர் தம்மிக ஏனைய லயன்ஸ் கழக முக்கியஸ்தர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

நூருல் ஹுதா உமர்









## பழைய மாணவர் சங்கம் அங்குரார்ப்பணம்

மன்னார், பேசாலை சென். மேரிஸ் பெண்கள் வித்தியாலயத்தில் 1983 ஆம் ஆண்டு தொடக்கம் 1999 ஆம் ஆண்டு வரை கல்வி கற்ற பழைய மாணவிகளின் ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று முன்தினம் (09) அதிபர் செபஸ்டியான் ராஜேஸ்வரன் பச்சேக் தலைமையில் நடைபெற்றது.

புனித வெற்றி நாயகி தேவாலயத்தில் இருந்து, பிரதான வீதி, பேசாலை கிராமம் வீதி வழியாக பவனியாக பாடசாலையை வந்தடைந்த பழைய மாணவிகள், விளையாட்டு போட்டி, கலை நிகழ்வுகளில் ஈடுபட்டிருந்ததுடன் பழைய மாணவர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்ததுடன் பாடசாலையில் கற்பித்த ஆசிரியர்களையும் கௌரவித்தனர். குறித்த நிகழ்வுகளில், பேசாலை பங்கு தந்தை அருட்திரு ஏ. அன்ரன் அடிகளார் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

எஸ். றொசேரியன் லெம்பேட்

# Macksons Tea Exports அறிமுகம்

*Macksons* குழுமம், தனது சமீபத்திய வணிக முயற்சியான *Macksons Tea Exports*ஐ அங்குரார்ப்பணம் செய்துள்ளது.

இலங்கையின் பசுமையான தேயிலைத் தோட்டங்களின் மையப்பகுதியில் அமைந்திருக்கும், *Macksons Tea Exports*, மிகுந்த கவனத்துடனும் அர்ப்பணிப்புடனும் வளர்க்கப்பட்ட சிறந்த தேயிலைகளின் மகிழ்ச்சிகரமான தொகுப்பை வெளிப்படுத்தியுள்ளது.

*Macksons Tea Exports*இல், இலங்கை தேயிலையின் மகிழ்ச்சியை உலகுடன் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பை நாம் மிகவும் விரும்புகிறோம். வெறும் தேயிலை ஏற்றுமதியாளர் என்பதற்கு அப்பால் எமது இலக்கு நீண்டுள்ளது. இலங்கையின் தேயிலை தொழிற்றுறையில் மாற்றத்திற்கான வழிகாட்டியாக இருப்பதை எமது நோக்கமாகக் கொண்டுள்ளோம். பாரம்பரியத்தை புத்தாக்கத்துடன் கலப்பதன் மூலம், உலகெங்கிலும் உள்ள நுகர்வோருக்கான தேநீர் அனுபவத்தை மீள்வரையறை செய்ய நாம் முயல்கிறோம். அதன் மூலமாக, இலங்கையை உயர் ரக தேயிலை உற்பத்தி மற்றும் கலாசார ஆய்வு மையமாக உலக வரைபடத்தில் உறுதியாக இடம்பெறச் செய்கிறோம்.

"*Macksons Tea Exports*மற்றும் எமது முதன்மையான தேநீர் சுவை பார்க்கும் அறையின் விமரிசையான அங்குரார்ப்பணத்தின் மூலம், இலங்கையின் பாரம்பரியத்திற்கான மேன்மை மற்றும் அர்ப்பணிப்புக்கான எமது பாரம்பரியத்தை தொடர்ந்து முன்னெடுப்பதில் நாம் பெருமிதம் கொள்கிறோம். எமது தேயிலை வகைகள், எமது நிலம், அது உற்பத்தி செய்யும் இலங்கை தேயிலையின் அதிசிறந்த தரம் ஆகியவற்றுக்கிடையில் ஆழமான வேரூன்றியுள்ள பிணைப்பை பிரதிபலிக்கும் வகையில் சிறந்து விளங்குகின்றன" என *Macksons Tea Exports*இன் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சஜ்ஜாத் சைஹீன் குறிப்பிட்டார்.

*Macksons Tea Exports*தனது செயற்பாடுகளின் மையத்தில் நிலைபேற்றியல் மற்றும் நெறிமுறை பிறழாத நடைமுறைகளைத் தழுவி, தன்னைத் தனித்துவமாக நிலைபெறச் செய்துள்ளது. உள்நாட்டு தேயிலை தோட்டக்காரர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வலுவூட்டுவதிலும், நியாயமான ஊதியத்தை உறுதி செய்வதிலும், சமூக மேம்பாட்டுக்கு ஆதரவளிப்பதிலும் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.



சுற்றுச்சூழல் நேயமான பயிர்ச்செய்கை முறைகள் மற்றும் பொறுப்புணர்வுடனான பெற்றுக்கொள்ளும் வழிமுறைகளை நாம் தீவிரமாக ஊக்குவிப்பதால், சுற்றுச்சூழலின் மீதான பொறுப்புணர்வு என்பது எமது பயணத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

இலங்கையின் எதிர்காலத்திற்கான குழுமத்தின் முற்போக்கான இலக்குக்கு இணங்க, *Macksons Tea Exports*,மூலோபாய ஒத்துழைப்புகள் மற்றும் புத்தாக்கங்கள் மூலம் நாட்டின் தேயிலை தொழிற்றுறையின் எல்லைகளை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதிநவீன தொழில்நுட்பங்கள் மற்றும் நவீன சந்தைப்படுத்தல் மூலோபாயங்களின் அனுகூலங்களின் துணையுடன், இலங்கையின் பெருமையையும், தேயிலையின் மீதான பேரார்வத்தையும் பிரதிபலிக்கும் உலகளாவிய வர்த்தகநாமத்தை உருவாக்குவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

உலகளாவிய கண்ணோட்டத்துடன் கூடிய ஒரு கூட்டு நிறுவனமாக, சர்வதேச அரங்கில் ஓர் அழியாத முத்திரையை பதிக்கும் அதே வேளையில் இலங்கையின் எதிர்காலத்தை மேம்படுத்துவதில் *Macksons* குழுமம் தனது பொறுப்பை உணர்ந்துள்ளது. *Macksons Tea Exports* மூலம், நாட்டின் வளமான பாரம்பரியம் மற்றும் கலாசாரத்தை மேம்படுத்துதல், உலகளாவில் நேர்மறையான கண்ணோட்டத்தை வளர்ப்பது மற்றும் இலங்கையை தேயிலைக்கு மேன்மைபெற்ற ஒரு சிறந்த நாடாக நிலைநிறுத்துவதே எமது அவாவாக உள்ளது.

மாற்றத்திற்கான இந்தப் பயணத்தை நாம் ஆரம்பிக்கையில், இலங்கை தேயிலையின் மகிமையை ரசிப்பதில் எம்முடன் கைகோர்க்குமாறு உலகெங்கிலும் உள்ள தேநீர் பிரியர்கள் மற்றும் கூட்டாளர்களை *Macksons* குழுமம் அழைக்கிறது.

## Multilac 3 in 1Waterproofing பெயின்ட்டுக்கு CIOB பசுமை விருது

*Macksons Paint Lanka (Pvt) Limited* நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட *Multilac 3 in 1Waterproofing* பெயின்ட்டுக்கு, *Ceylon Institute of Builders (CIOB)* இன் தயாரிப்புகள் மற்றும் கட்டமைப்புகளுக்கான பசுமை விருதில் தங்க விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாராட்டு, இலங்கை கட்டுமான துறையில் நிலைபேற்றியல் மற்றும் புத்தாக்கத்தின் மீது *Multilac* காண்பிக்கும் அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

*CIOB* பசுமை விருதானது, நிலைபேண்தகு நடைமுறைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சமூகப் பொறுப்புணர்வு மற்றும் பொருளாதார நெகிழ்திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதில் சிறந்த தலைமைத்துவத்தை வெளிப்படுத்திய தயாரிப்புகள் மற்றும் கட்டமைப்புகளை அங்கிகரிக்கிறது. *Multilac 3 in 1 Waterproofing* பெயின்ட் மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களில் ஆற்றிய குறிப்பிடத்தக்க பங்களிப்பின் காரணமாக விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டவர்களில் தனித்துவமாகத் திகழ்ந்துள்ளது.

இந்தப் பெயின்ட் நிலைபேண்தகு கட்டுமானத்தின் தரத்திற்கு மீள்வரைவிலக்கணம் வகுக்கும் சிறப்பம்சங்களின் தனித்துவமான கலவையை வழங்குகிறது. மிகச்சிறந்த நீர் எதிர்ப்பு மற்றும் தடுப்பாற்றல் தன்மைப் பண்புகளுடன், இது கூரைகள், சுவர்கள், குளியலறைகள் உள்ளிட்ட மேற்பரப்புகளை நீர் மூலமாக ஏற்படும் சேதத்திலிருந்து பாதுகாக்கிறது. சூரிய ஒளியை பிரதிபலிக்கும் திறன், உட்புற வெப்பநிலையை 5 பாகை செல்சியஸ் வரை குறைத்து, எரிசக்தியைச் சேமிக்கும் திறன் ஆகியன இதனை உண்மையிலேயே தனித்துவத்துடன் திகழச் செய்கின்றன.

சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் *Multilac* இன் அர்ப்பணிப்பு அதன் குறைந்த ஆவியாகும் கரிம சேர்மத்தின் (*Volatile Organic Compound -VOC*) உள்ளடக்கத்தின் மூலம் தெளிவாக புலப்படுவதுடன், இது சுற்றுச்சூழல்நேயம் கொண்டதாகவும் உட்புற சூழல்களுக்கு பாதுகாப்பாகவும் உள்ளது. *IPEN USA*ஆல் *Lead Safe* என சான்றளிக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் *Green, ISO 9001, ISO 14001,* மற்றும் *SLS* சான்று அங்கிகாரங்களையும் கொண்டுள்ளதுடன், தீந்தை மிக




உயர்ந்த நிலைபேற்றியல் தரங்களை உள்ளடக்கியது.

சிட்ரஸ் வஸ்கடுவ பீச் ரிசோர்ட், பார்க் லேன் ரெசிடென்சிஸ் ஹோமாகம, நியூ கார்கில்ஸ் ஃபூட் சிட்டி கிளைகள் போன்ற திட்டங்களில் அதன் பங்களிப்பானது இத்தயாரிப்பின் தலைமைத்துவ ஸ்தானத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளன. வெளிப்புறச் சுவர்கள் முதல் இடைவெளியற்ற சுவர்கள் மற்றும் எரிசக்தி உணர்திறன் கொண்ட பகுதிகள் வரை இந்தப் பண்புகளில் அதன் பயன்பாடு அதன் பல்துறை திறன் மற்றும் செயற்றிறனை எடுத்துக்காட்டுகிறது.

*Multilac* இன் பங்களிப்புகள் சுற்றுச்சூழலுக்கான நன்மைகளுக்கும் அப்பாற்பட்டவை. பராமரிப்புத் தேவைகளைக் குறைப்பதன் மூலமும், எரிசக்தியைப் பாதுகாப்பதன் மூலமும், ஆதன உரிமையாளர்களுக்கும், கட்டுமானத் தொழில் துறைக்கும் பொருளாதார நன்மைகளை வழங்குகிறது. தொழில் வாய்ப்புகள் மற்றும் சமூக மேம்பாட்டில் இத்தீந்தையின் நேர்மறையான தாக்கம் நிலைபேற்றியலில் அதன் தலைமைத்துவ ஸ்தானத்திற்கு மதிப்புமிக்க சமூக பரிமாணத்தை சேர்ப்பிக்கிறது.

"*CIOB*பசுமை விருது தங்க அங்கிகாரத்தைப் பெறுவதில் நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம். இது கட்டுமானத் துறையை நிலைபேற்றியலை நோக்கி திசைமாற்றுவதற்கான எமது அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காண்பிக்கிறது" என்று *Macksons Paint Lanka (Pvt) Limited* இன் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

## செலான் அட்டைகளிடமிருந்து வாகன பராமரிப்புக்கு 0% இலகு கொடுப்பனவுத் திட்டம்

செலான் அட்டைகள் இலங்கையின் வாகனப் பராமரிப்பு சேவை வழங்குனர்களோடு பங்காண்மையை ஏற்படுத்தி, பிரத்தியேக 0% வட்டியுடனான இலகுக் கொடுப்பனவுத் திட்டங்களை வாகனப் பராமரிப்பு சேவைகளுக்காக வழங்க முன்வந்துள்ளது. இதனூடாக அட்டைதாரர்களுக்கு பெருமளவு சௌகரியத்தையும் நிதி ரீதியான ஆறுதலையும் ஏற்படுத்த முன்வந்துள்ளது. செலான் அட்டைகளுடன் கைகோர்த்துள்ள வாகனப் பராமரிப்பு சேவை சேவை வழங்குநர்களில் U&H Wheel Service, DSI Tyres, Crown Tyres Pvt Ltd, Universal Tyre, Prince Tyre Service, Ideal Motors (Pvt) Ltd, Indra Motor Spares, Pink Auto Shop ஆகியன உள்ளடங்கியுள்ளன.

கொள்வனவுகளை இலகு கொடுப்பனவுத் திட்டங்களாக மாற்றிக்கொள்ள, அட்டை உரிமையாளர்கள் கொடுப்பனவை மேற்கொண்டு 7 வேலை நாள்களுக்குள் துரித இலக்கத்திற்கு அழைப்பினை மேற்கொள்ள வேண்டும்.

*Visa Signature* மற்றும் *World Mastercard* அட்டை உரிமையாளர்களுக்கு, அவர்கள் மேற்கொள்ளும்





கொடுக்கல் வாங்கல்களுக்காக செலவிடும் ஒவ்வொரு 100 ரூபாய்க்கும் ஒரு புள்ளி வீதமும், *Seylan Visa Platinum* அட்டை உரிமையாளர்களுக்கு, அவர்கள் மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களுக்காக செலவிடும் ஒவ்வொரு 300 ரூபாய்க்கும் ஒரு புள்ளி வீதமும் வெகுமதிப் புள்ளிகள் வழங்கப்படும். இப்புள்ளிகளைப் பல்வேறு விற்பனையாளர்களிடம் பயன்படுத்த முடிவதோடு, செலான் அட்டைகளின் பெறுமதியை இவை மேலும் மேம்படுத்துகின்றன. இந்த சலுகைகள் 2023 டிசெம்பர் 31 வரை செல்லுபடியாகும்.

இங்கிலாந்து

# இரண்டாம் எலிசபெத்தின் நினைவாக ‘தி கிரவுன்’ வெளியீடு

அதிகாரத்தின் உச்சமாகவும் அரச நெறிமுறைக்கான எடுத்துக்காட்டாகவும் வாழ்ந்து மறைந்தவர் இங்கிலாந்து மகாராணி இரண்டாம் எலிசபெத். உலக வரலாற்றில், இரண்டாவது அதிக நாள்கள் ஆட்சி புரிந்தவர் என்ற பெருமையை பெற்ற மகாராணி எலிசபெத், கடந்த ஆண்டு செப்டெம்பர் எட்டாம் திகதி காலமானார். அவரது முதலாம் ஆண்டு நினைவு தினம் வெள்ளிக்கிழமை (08) அனுசரிக்கப்பட்டது. அதனை சிறப்பானதாக்கும் வகையில், நாணயம் ஒன்றை கிழக்கிந்திய கம்பெனி என்ற நிறுவனம் வெளியிட்டுள்ளது.





சுமார் 300 ஆண்டுகள் இந்தியாவில் கோலோச்சிய கிழக்கிந்திய கம்பெனி, 1874 ஆம் ஆண்டு கலைக்கப்பட்ட நிலையில், அதன் பெயருக்கான உரிமையை இந்தியாவை பூர்வீகமாக கொண்ட சஞ்சீவ் மேத்தா வாங்கி உள்ளார். அந்தப் பெயரில் சஞ்சீவ் மேத்தா விலையுயர்ந்த கலைப்பொருட்களை உருவாக்கி வருகிறார். அவர் இரண்டாம் எலிசபெத் மாகாராணியின் நினைவாக ‘தி கிரவுன்’ என்றழைக்கப்படும் நாணயத்தை அறிமுகம் செய்துள்ளார்.

சுமார் நான்கு கிலோ கிராம் தங்கத்தையும் 6,426 வைரங்களையும் கொண்ட இந்த நாணயம், 24.5 சென்ரிமீட்டர் விட்டம் கொண்டது. நாணயம் முழுவதும், 2 ஆம் எலிசபெத்தின் உருவங்கள், அவரின் வார்த்தைகள், அவர் பயன்படுத்திய மகுடங்கள் ஆகியவை மிக நுணுக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ளன என சஞ்சீவ் மேத்தா தெரிவித்துள்ளார்.

ஆந்திரா

## மூன்றாவது புவி சுற்று வட்டப் பாதைக்குள் ஆதித்யா எல்-1




ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து கடந்த இரண்டாம் திகதி காலை 11.50 மணிக்கு பிஎஸ்எல்வி சி-57 ரொக்கெட், ஆதித்யா எல் - 1 விண்கலத்தை சுமந்துகொண்டு சூரியனை நோக்கி வெற்றிகரமாகப் பாய்ந்தது. பின்னர், ஆதித்யா எல்-1 விண்கலம் புவி சுற்றுவட்டப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது.

இந்த விண்கலம் அடுத்தாண்டு ஜனவரி மாதம் நான்காம் திகதி, அதன் இலக்கை அடையும் எனவும் நான்கு மாத பயணத்திற்கு பின்னரே விண்கலம் சென்று சேரும் என்றும், அந்த இடத்தில் இருந்து கிரகணங்கள் அல்லது மறைவுகளின் தடையின்றி, தொடர்ந்து சூரியனைக் கண்காணித்து ஆய்வு பணியில் இந்த விண்கலம் ஈடுபடும் என்றும் இஸ்ரோ தெரிவித்தது. இந்நிலையில், சூரியனை நோக்கி பயணிக்கும் ஆதித்யா எல்-1 விண்கலம், மூன்றாவது புவி சுற்று வட்டப்பாதைக்கு வெற்றிகரமாக செலுத்தப்பட்டதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

அமெரிக்கா

## திரைப்படங்கள் பார்த்து கின்னஸ் சாதனை

அமெரிக்காவை சேர்ந்த சாக்ஸ்வோப் என்பவர் 2022ஆம் ஆண்டு ஜூலை முதல் 2023 ஜூலை வரையிலான ஓர் ஆண்டில் மட்டும் மொத்தம் 777 திரைப்படங்கள் பார்த்து கின்னஸ் சாதனையை படைத்துள்ளார். 32 வயதான இவர் ஒவ்வொரு வருடமும் சராசரியாக 100 முதல் 150 படங்கள் வரை தியேட்டரில் பார்த்து வந்துள்ளார்.

இந்நிலையில் கின்னஸ் சாதனை படைப்பதற்காக அங்குள்ள ரீகல் சினிமாஸ் தியேட்டரில் கடந்த ஆண்டு ‘மினியன்ஸ்: ரைஸ் ஒப் க்ரு’ படத்தில் தொடங்கி ‘இன்டியானா ஜோன்ஸ் அன்ட் தி டயல் ஒப் டிஸ்டினி’ வரை பலதரப்பட்ட படங்களையும் பார்த்துள்ளார். ஒவ்வொரு வார நாள்களிலும் காலை 6.45 மணி முதல் மதியம் 2.45 வரை வேலைக்கு செல்லும் சாக்ஸ்வோப், அதன்பிறகு தியேட்டருக்கு சென்று மூன்று படங்கள் வரை பார்த்துள்ளார். வார இறுதி நாள்களில் கூடுதல் காட்சிகளையும் பார்த்து இந்தச் சாதனையை அவர் படைத்துள்ளார்.




மேற்கு வங்காளம்

## நிலாவில் நிலம் வாங்கி மனைவிக்கு பரிசளித்த கணவர்




மேற்கு வங்க மாநிலம் ஜார்கிராம் பகுதியை சேர்ந்தவர் சஞ்சய் மகாட்டோ. இவர் காதல் திருமணம் செய்தவர். திருமணத்திற்கு முன்பு சஞ்சய் தனது காதலியிடம் “உனக்கு நிலாவில் நிலம் வாங்கி தருகிறேன்” என கூறியிருந்தாராம். இந்நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் அவர் காதலியை கரம் பிடித்தார்.

இந்நிலையில் தனது வாக்குறுதியை காப்பாற்றும் வகையில் சஞ்சய் தனது காதல் மனைவிக்கு நிலாவில் ஓர் ஏக்கர் நிலத்தை வாங்கி மனைவிக்கு பிறந்தநாள் பரிசளித்துள்ளார். இதுகுறித்து சஞ்சய் கூறுகையில், “திருமணத்துக்கு முன் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக எனது மனைவிக்கு நிலாவில் இடம் வாங்கி பரிசளிக்க திட்டமிட்டேன். இதுதொடர்பாக எனது நண்பர்களிடம் ஆலோசித்தேன். அவர்களது உதவியுடன் லூனா சொசைட்டி இன்டர்நேஷனல் நிறுவனம் மூலம் நிலாவில் நிலம் வாங்கினேன். பின்னர் நிலம் வாங்கியதற்கான பதிவு சான்றை எனது மனைவியிடம் கொடுத்தபோது அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்” என்று கூறினார்.

பெங்களூர்

## 72 பாம்பு குட்டிகளை கடத்திய இளம்பெண்



பெங்களூர் கெம்பே கவுடா சர்வதேச விமான நிலையத்திற்கு வெளிநாட்டில் இருந்து பிராணிகளால் உயிரினங்கள் கடத்தி வரப்படுவதாக அதிகாரிகள் மற்றும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து விமானப் பயணிகள் மற்றும் அவர்களது உடைமைகளை அதிகாரிகள் சோதனை செய்தனர்.

அப்போது பாங்கொக்கில் இருந்து வந்த பயணிகளின் உடைமைகளை பொலிஸார் மற்றும் அதிகாரிகள் சோதனை செய்தார்கள். அப்போது ஒரு பெண் பயணி, தனது உடைமைகள் இருந்த பெட்டிகளை விட்டுவிட்டு வேகமாக சென்று விட்டார். அந்தப் பெட்டிகளை திறந்து பார்த்தபோது 72 பாம்புகள் குட்டிகள் மற்றும் ஆறு குரங்குகள் இறந்து கிடந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் இந்தக் கடத்தல் சம்பவத்தில் தலைமறைவான பெண்ணை பொலிஸார் தேடி வருகின்றனர்.

வடகொரியா

## பதிலடி கொடுக்கத் தயாரான வடகொரியா

வடகொரியா - தென்கொரியா இடையே நீண்ட காலமாக பிரச்சினை இருந்து வருகிறது. தென்கொரியாவுடன் இணைந்து அமெரிக்க படையினர் கொரிய தீபகற்ப பகுதிகளில் கூட்டு பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், வடகொரியா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை ஏவி சோதனை நடத்தி வருகிறது. உலக நாடுகள் எதிர்ப்பை மீறி வடகொரியா இந்தச் சோதனையில் ஈடுபட்டு வருகிறது.


இந்நிலையில் வடகொரியா தனது கடற்படையை பலப்படுத்தும் விதமாக முதல் முறையாக அணுசக்தி தாக்குதல் நடத்தும் நவீன நீர்மூழ்கி கப்பலை தயாரித்து உள்ளது. இந்த நீர்மூழ்கி கப்பல் தற்போது பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டு உள்ளது. இதனை வடகொரியா அதிபர் கிம் ஜாங் உன் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

அணு ஆயுதங்கள் தாங்கிய இந்த நீர்மூழ்கி கப்பல், கொரியா தீப கற்பம் மற்றும் ஜப்பானுக்கு இடையே உள்ள கடற்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபடும். பல மணி நேரம் நீரில் மூழ்கியபடி பயணம் செய்யும் வகையில் இக்கப்பல் வடிவமைக்கப்பட்டு உள்ளது.




ஆசியக் கிண்ணம்:

# பங்களாதேஷை வென்ற இலங்கை



ஆசியக் கிண்ணத் தொடரில், கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பங்களாதேஷ் உடனான சுப்பர் 4 சுற்றுப் போட்டியில் இலங்கை வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

இலங்கை: 257/9 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: சதீர சமரவிக்கிரம 93 (72), குசல் மெண்டிஸ் 50 (73), பதும் நிஸங்க 40 (60) ஓட்டங்கள். பந்துவீச்சு: தஸ்கின் அஹ்மட் 3/62, ஹஸன் மஹ்மூட் 3/57, ஷொரிஃபுல் இஸ்லாம் 2/48)

பங்களாதேஷ்: 236/10 (48.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: தௌஹிட் ஹிரிடோய் 82 (97) ஓட்டங்கள். பந்துவீச்சு: தசுன் ஷானக 3/28, மதீஷ பத்திரண 3/58, மகேஷ் தீக்ஷன 3/69, டுனித் வெல்லலாகே 1/26)

போட்டியின் நாயகன்: சதீர சமரவிக்கிரம



சிறுவர் மெய்வல்லுநர் போட்டியில்

## பிரகாசித்த சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் வித்தியாலயம்

நூருல் ஹுதா உமர்

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கோட்ட மட்டத்திலான சிறுவர் மெய்வல்லுநர் விளையாட்டு போட்டியில் சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலயம் சார்பாக கலந்து கொண்ட தரம் 3, தரம் 4, தரம் 5 ஆண், பெண், கலப்பு அணிகள் மூன்றும் முதலிடம் பெற்று அபார வெற்றியீட்டியுள்ளனர்.

போட்டிக்காக மாணவர்களை பயிற்றுவித்த பாடசாலையின் உடற்கல்வி பொறுப்பாசிரியர் எம்.எப்.எம்.றிபாஸ், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் என்.எம்.ஏ. ஆபாக் ஆகியோர்களுக்கு பாடசாலை சமூகம் சார்பாக பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீன் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

மாகாண மட்டத்துக்கு கிண்ணியா வலயத்திலிருந்து

## தெரிவான முதலாவது பாடசாலையாக அஸ் ஸபா வித்தியாலயம்

ஒலுமுதீன் கியாஸ்




கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதுக்குட்பட்ட கைப்பந்து போட்டியில் கிண்ணியா அஸ் ஸபா வித்தியாலயம் மூன்றாமிடத்தைப் பெற்றது.

இதன் மூலம் கிண்ணியா வலயத்தில் கைப்பந்து போட்டியில், மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள முதலாவது அணி என்ற சாதனையை அஸ் ஸபா வித்தியாலயம் படைத்துள்ளது.

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டம்:

## இறுதிப் போட்டியில் காத்தான்குடி மத்திய கல்லூரி

அஸ்ஹர் இப்றாஹிம்

கிழக்கு மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு காத்தான்குடி மத்திய கல்லூரி தகுதி பெற்றுள்ளது.

அண்மையில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் கிழக்கின் பலம் பொருந்திய கிண்ணியா மத்திய கல்லூரியை வென்றே இறுதிப் போட்டிக்கு காத்தான்குடி மத்திய கல்லூரி தகுதி பெற்றது.

போட்டியின் வழமையான நேரத்தில் இரண்டு அணிகளும் எதுவித கோல்களையும் பெறாத நிலையில், பெனால்டியில் 4-3 என்ற ரீதியில் வென்றே இறுதிப் போட்டிக்கு காத்தான்குடி மத்திய கல்லூரி தெரிவாகியது.

மாகாணத்தில்

## மன்னார் தட்சனாமருதமடு ம.வி சுடர்மதி புதிய சாதனை




எஸ். றொசேரியன் லெம்பேட்

வட மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகளில் 16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 300 மீற்றர் தடைதாண்டல் போட்டியிலே மடு கல்வி வலயத்துக்குட்பட்ட தட்சனாமருதமடு மகா வித்தியாலய மாணவி யோ.சுடர்மதி புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

கடந்த 2018ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிகளில் மாணவி ஒருவர் குறித்த நிகழ்வை 51.7 செக்கன்களில் முடித்து சாதனை நிகழ்த்தி இருந்தார். அதனை சுடர்மதி 50.08 செக்கன்களில் ஓடி முடித்து புதிய மாகாண சாதனையை நிலை நாட்டி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 11 செப்டெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.